DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No:**S.C.No.96/2025**
Prosecution Witness P.W.14

Name : **திரு.மேகநாதன்** Caste:

Father's Name :**திரு.** Calling :

Village: Religion :

Taluk : Age:

எதிரிகள் ஆஜர்
**நாள்: 16.02.2026.**
(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )
**முதல் விசாரணை**

1. நான் தற்போது ராமநாதபுரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் அறிவியல் அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் பணிபுரிந்தபோது கடந்த 20.11.2019-ம் தேதியன்று பேராசிரியர் அரசு சட்டம் சார்ந்த மருத்துவத்துறை தேனி அவர்களிடமிருந்து முதுநிலை காவலர் எண் 2120 திரு.குமார் என்பவர் மூலமாக போடிநாயக்கனூர் நகர் காவல் நிலைய குற்ற எண். 959/2019 வழக்கில் சம்பந்தப்பட்ட ஹபிபுல்லா ஆண் வயது 45 என்பவரின் பிரேத பரிசோதனையின் போது எடுக்கப்பட்ட (பி.எம் நம்பர் 658 / 2019) உடல் உள்ளுறுப்புகளான 1. வயிறு, 2. சிறுகுடல், 3. கல்லீரல் மற்றும் சிறுநீரகம், 4. பாதுகாப்பு மற்றும் உப்பு கரைசல் ஆகியவைகள் நான்கு பிளாஸ்டிக் குப்பிகளில் சரியான மூடி முத்திரையிடப்பட்டு விஷத்தன்மை அறிவதற்காக இவ்வாய்வகத்தில் MDU/Tox.H.2176/ 2019 என்று எண்ணிடப்பட்டு பரிசோதனைக்காக பெறப்பட்டது.

2. மேற்கூறிய பொருட்களில் பகுப்பாய்வு செய்ததில் வயிறு, சிறுகுடல், கல்லீரல் மற்றும் சிறுநீரகம் ஆகியவற்றில் ஆர்கனோ பாஸ்பரஸ் பூச்சிக்கொல்லி மருந்து (ஆர்கனோ பாஸ்பரஸ் இன்செக்ட்டிசைட்) கண்டறியப்பட்டது, மற்றும் பாதுகாப்பு உப்பு கரைசல் விஷத்தன்மை எதுவும் கண்டறியப்படவில்லை என்ற நச்சியியல் அறிக்கை பேராசிரியர் அரசு சட்டம் சார்ந்த மருத்துவத்துறை, அரசு

மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தேனி அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது இது சம்பந்தமாக நான் வழங்கிய அறிக்கை அ.சா.ஆ.8 (ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது)

3. ஆர்கனோ பாஸ்பரஸ் சென்ற பூச்சிக்கொல்லி மருந்தானது பொதுவாக பூச்சி மருந்து கடைகளில் கிடைக்கக்கூடிய ஒரு பொருள் என்றால் சரிதான். உடல் உள்ளுறுப்புகளில் உள்ள வேதிப்பொருட்கள் குறித்து மட்டுமே என்னால் சொல்ல முடியும் அது பல நாட்கள் அந்த பொருள் ஒரு நபருக்கு வழங்கப்பட்டதா அல்லது எவ்வளவு அளவு கொடுத்தால் இறப்பு ஏற்படும் என்ற கருத்துரை என்னால் சொல்ல முடியாது. இந்த பூச்சிக்கொல்லி மருந்து ஒரு நபர் அருந்தும் உணவில் கலந்து கொடுக்கும்போது அவருக்கு இறப்பு ஏற்பட வாய்ப்பு உண்டு.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. உடல் உள்ளுறுப்பில் என்ன நச்சு பொருள் கலந்துள்ளது என்று மட்டுமே நான் கருத்துரை வழங்கி உள்ளேன் என்றால் சரிதான். எவ்வளவு அளவிற்கு நச்சுப்பொருள் கலக்கப்பட்டுள்ளது என்ற விபரம் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எவ்வளவு டோஸேஸ் உடல் உள்ளுறுப்பில் உள்ளது என்பதை கண்டுபிடிக்காத பட்சத்தில் அந்த விஷயத்தினால் மட்டுமே மரணம் ஏற்படுத்த கூடும் என்று சொல்ல முடியாது என்றால் அது பற்றி பிரேத பரிசோதனை மேற்கொண்ட மருத்துவர் மட்டுமே சொல்ல முடியும். இந்த வழக்கில் இதற்கு முன்பு போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. நான் அரசு தரப்புக்கு ஆதரவாக சான்று அளித்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.02.16 16:36:05 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.